தமிழ் Mirror
www.tamilmirror.lk
MONDAY, FEBRUARY 3, 2025
திங்கட்கிழமை, 03 பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர்: 150 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# “காத்திருங்கள்”

## அவசர படுவோருக்கு அநுர அறிவுரை



நாட்டில் சட்டவிரோதமாக வாகனங்களைப் பயன்படுத்திய பலர் இந்த மாதத்தினுள் கைது செய்யப்படுவார்கள் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் மற்றுமொரு நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கிலேயே இறக்குமதியாகும் வாகனங்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

குருணாகல் - கல்கமுவ பகுதியில் சனிக்கிழமை (01) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போது இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் சட்டவிரோதமாக வாகனங்களைப் பயன்படுத்திய பலர் இந்த மாதத்தினுள் கைது செய்யப்படுவார்கள்.

தனிப்பட்ட பாவனைக்கான வாகனங்களை இறக்குமதி செய்வதற்குப் பல வருடங்களின் பின்னர் மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது மிகவும் நுட்பமாகவும் கவனமாகவும் செய்யப்பட வேண்டியதொரு செயற்பாடாகும்.

ஏனென்றால், எம்மிடம் பெரியளவில் டொலர் கையிருப்பு இல்லை.

5 வருடங்களாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவில்லை.

ஒரே தடவையில் வாகனங்களுக்கான கேள்வி அதிகரித்துச் சிக்கல் ஏற்படுமாயின் நாட்டில் மீண்டுமொரு நெருக்கடி ஏற்படும்.

எனவேதான், மேலதிகமாக வாகனங்களுக்கான வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வாகன இறக்குமதிக்குத் தொடர்ந்தும் கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு மாறாக படிப்படியாக அந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும்.

தற்போது, வாகனங்களின் விலை அதிகரித்தாலும், சில நாட்கள் செல்லும்போது அதனைக் குறைப்பதற்கும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

தொடர்ச்சி P2



# கோழி இறைச்சி, முட்டை விலைகள் குறைந்தன

சந்தையில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் சில்லறை விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளன.

அதன்படி, ஒரு முட்டையின் விலை ரூ.26 முதல் ரூ.30 வரையிலும், ஒரு கிலோ கோழி இறைச்சி ரூ.650 மற்றும்

தொடர்ச்சி P2




# “தேசிய மறுமலர்ச்சிக்காக அணி திரள்வோம்"

“தேசிய மறுமலர்ச்சிக்காக அணி திரள்வோம்" என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இலங்கையில் 77ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் சுதந்திர சதுக்கத்தில் மிகவும் விமர்சையாக நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# இன்று லண்டனுக்கு செல்கிறார் ரணில்



‘நமது காலத்தில் பெரும் பிரச்சினைகளை கையாளுதல்’ என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் விசேட கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று திங்கட்கிழமை(03) லண்டனுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தொடர்ச்சி P2

# மாவையின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்







தமிழரசு கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை (02) பிற்பகல் மாவிட்டப்புரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

கடந்த மூன்று நாட்களாக மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அவரது புதவுடல், ஞாயிற்றுக்கிழமை (02) காலை இறுதிக் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் உடல் தகனம் செய்யப்பட்டது.

இறுதி நிகழ்வில் அரசியல்வாதிகள், பொது அமைப்பினர், மத குருமார்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

1942ஆம் ஆண்டு ஒக்டோபர் 27ஆம் திகதி பிறந்த மாவை. சோ.சேனாதிராஜா, அண்மையில் உடல்நலக் குறைவால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தொடர்ந்து, சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி கடந்த 29ஆம் திகதி காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.



# இளைஞர்களிடையே அதிகரிக்கும் பாலியல் நோய்கள்

நாட்டின் இளைஞர்களிடையே எச்.ஐ.வி. மற்றும் பாலியல் நோய்கள் அதிகரித்து வருவதாக சமூக மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# கைதிகளை பார்வையிட உறவினர்களுக்கு சந்தர்ப்பம்

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, சிறைக் கைதிகளை பார்வையிட உறவினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# “உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தீர்க்கரமானது”



நாட்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மிகவும் முக்கியமானது. கிராமத்தை பாதுகாக்கவும் நகரத்தை பாதுகாக்கவும் மக்கள் நம்பிக்கை வைக்கும் திறமையான வேட்பாளர்களை நாம் களமிறக்குவோம். மக்கள் ஆதரவோடு நாம் வெற்றி பெற வழிவகுப்போம்.

தொடர்ச்சி P2

# மகனின் தாக்குதலில் தந்தை பலி

மகனின் தாக்குதலுக்கு இலக்காகி தந்தை ஒருவர் உயிரிழந்த சம்பவம் உடப்பு பொலிஸ் பிரிவின் பெரியகொலனி பகுதியில் சனிக்கிழமை (01) அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

உடப்பு, ஆடிமுனை பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

# செந்திலின் நியமனங்கள் குறித்து விசாரணை



கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் செந்தில் தொண்டமான் காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கக் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவால் மூன்று பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டது ASLAT



பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் (PNS) ASLAT சனிக்கிழமை(01) காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இவ்வாறு வருகை தந்த கப்பலை இலங்கை கடற்படை வரவேற்றுள்ளது.

தொடர்ச்சி P2




# “சோற்றுக்கே அங்கலாய்க்கும் நிலை உருவாகி விட்டது”

■ வி.சுகிர்த குமார்



காதலிக்கும் போது கொடுத்த வாக்குறுதிகளை கல்யாணத்தின் பின்னர் நிறைவேற்ற முடியாதவர்கள் போல் தற்போதைய ஆட்சியாளர்கள் ஆகி விட்டனர் என அம்பாறை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின்

தொடர்ச்சி P2

# விகாரைக்கு அயலிலுள்ள காணியை மாற்றீடாக வழங்க ஆலோசனை



யாழ். தையிட்டியில் தற்போது திஸ்ஸவிகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், காணியின் உரிமையாளர்களுடன் சந்திப்பு நடத்தியிருந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “காத்திருங்கள்”

இதேவேளை, விவசாயிகளுக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

15,000 ரூபாவாக இருந்த உர மானியம் 25,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்ட போதிலும் அதனை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

உண்மையில் கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அதிக நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளதால் புதிய வேலைத்திட்டங்களில் அவதானம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியிலும் சிலர் சட்டவிரோதமாக வாகனங்களை இறக்குமதி செய்து பயன்படுத்தியுள்ளனர்.

அவ்வாறான மேலும் சிலர் எதிர்வரும் நாட்களில் கைது செய்யப்படுவார்கள் எனவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## பாலியல் நோய்கள்...

சமூக ஊடகங்களின் பயன்பாடு இதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளதாகவும், 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் இந்த விடயத்தில் அதிக ஆபத்தில் உள்ளனர் என்பதுடன், இதனால் பாலியல் ரீதியாகப் பரவும் நோய்கள் மற்றும் பாதுகாப்பற்ற கர்ப்பங்கள் ஏற்படுவதாக சங்கத்தின் வைத்திய நிபுணர் விந்தியா குமாரப்பெலி தெரிவித்துள்ளார்.

கொழும்பு விஜேராமயில் உள்ள இலங்கை மருத்துவ சங்க கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“குறிப்பாக பாலியல் ரீதியாகப் பரவும் நோய்கள் மற்றும் எச்.ஐ.வியைப் பொறுத்தவரை, இளைஞர்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் அதிக ஆபத்தில் உள்ளனர்.

சமூக ஊடகங்களின் பயன்பாடு இதற்கு ஒரு பிரதான காரணமாகும்.

பல இளைஞர்கள் இந்த சமூக ஊடகங்கள் மூலம் கூட்டாளர்களைக் கண்டுபிடிக்கின்றனர்.

எல்லோரும் சமூக ஊடகங்களைப் பற்றி நினைப்பதில்லை, ஆனால், இளைஞர்கள் பல்வேறு உறவுகளை உருவாக்க சில டேட்டிங் பயன்பாடுகள் உள்ளன.

அது மட்டுமல்லாமல், சிலர் மது மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டை நாடியுள்ளனர். இது போன்ற காரணங்களால், பாலியல் ரீதியாகப் பரவும் நோய்கள் மற்றும் எச்.ஐ.வி. போன்ற வைரஸ்கள் மற்றும் பாதுகாப்பற்ற கர்ப்பங்கள் ஏற்படுகின்றன" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## செந்திலின் நியமனங்கள் குறித்து விசாரணை

அதன்படி, ஆளுநர் அலுவலகத்துக்குக் கிடைக்கும் அனைத்து எழுத்துப்பூர்வ குற்றச்சாட்டுகளும் விசாரணைக்காக அந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்படும்.

இந்த மூன்று பேர் கொண்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கைதிகளை பார்வையிட உறவினர்களுக்கு சந்தர்ப்பம்

அதன்படி, பெப்ரவரி 4ஆம் திகதி அன்று கைதிகளின் உறவினர்கள் கொண்டு வரும் உணவு மற்றும் சுகாதாரப் பொருட்களை ஒவ்வொரு கைதிக்கும் போதுமான அளவில் வழங்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியாக உள்ள அனைத்து அனைத்து சிறைச்சாலைகளிலும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, கைதிகளை பார்வையாளர்களுக்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக காமினி பி.திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டது ASLAT

PNS ASLAT கப்பல், முகமது அசார் அக்ரம் தலைமையிலான 123 மீட்டர் நீளமுள்ள ஒரு போர்க்கப்பலாகும்.

இந்தக் கப்பலில் 243 பேர் கொண்ட குழுவினர் பணியாற்றுகின்றனர்.

கொழும்பில் கப்பல் தங்கியிருக்கும் போது, அதன் பணியாளர்கள் நாட்டின் சில சுற்றுலா தலங்களைப் பார்வையிடுவார்கள் என்று இலங்கையின் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், பிஎன்எஸ் ASLAT 2025 பெப்ரவரி 4ஆம் திகதியன்று இலங்கையை விட்டு புறப்படும்.

இதன்போது, கொழும்பு கடலில் இலங்கை கடற்படையின் ஒரு கப்பலுடன் ஒரு பயணப் பயிற்சியை பாகிஸ்தானிய கப்பல் நடத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மகனின் தாக்குதலில்...

பெரியகொலனி பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த ஒருவர், உடல்நலக்குறைவு காரணமாக உடப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இறந்துவிட்டதாக உடப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

உடலைப் பரிசோதித்த சட்டவைத்திய அதிகாரி, இது சந்தேகத்திற்கிடமான மரணம் என்றும், நீதவான் விசாரணை தேவை என்றும் அறிவித்துள்ளார்.

அதன்படி, முன்னெடுத்த விசாரணையில், இந்த மரணம் ஒரு கொலை என்றும், தந்தை உறங்கி கொண்டிருந்த போது மகன் தந்தையின் மார்பில் கத்தியால் குத்தியுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

மேலும், இறந்தவரின் மகன் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதும், அன்று அவரது சிகிச்சைகாக தந்தை வராததால் ஏற்பட்ட கோபத்தில் தந்தையை அவர் கத்தியால் குத்தியதாகவும் தெரியவந்துள்ளது.

சடலம் புத்தளம் மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், குற்றத்தைச் செய்த சந்தேகநபரான 20 வயதுடைய மனநலம் பாதிக்கப்பட்ட மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## “சோற்றுக்கே...

இணை அமைப்பாளர் வெ.வினோகாந்த் குற்றம் சுமத்தியுள்ளார்.

அக்கரைப்பற்றில் ஞாயிற்றுக்கிழமை(02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, சோற்றுடன் சம்பலை வைத்து உணவருந்திய அன்றாட தொழிலாளர்கள் இன்று சோற்றுக்கே போராடுகின்றனர். அந்த அளவிற்கு நாட்டில் அரிசியும் இல்லை. தேங்காயும் இல்லை. சில நேரம் சம்பலுடன் சாப்பிட முடியாத குடும்பங்கள் உப்புடன் சோற்றை உண்ட வரலாறுகளும் இங்குண்டு. ஆனால், இன்று உப்பும் இல்லை.

கடலால் சூழப்பட்ட எமது நாட்டில் உப்பு கூட இல்லை. இந்த அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளைத் தாண்டி சோற்றுக்கே அங்கலாய்க்கும் நிலை உருவாகிவிட்டது. குறைகளைக் கூறிக் கொண்டிருப்பவர்களால் செயற்பட முடியாது என்பதற்கு இந்த அரசு நல்ல உதாரணம். இவர்கள் எதிர்க்கட்சியாக இருந்த போது, குறைகளையே கூறிக்கொண்டிருந்தனர். சாதாரணமாக ஒரு தொழிலுக்குச் செல்லும் போது கூட நேர்முகப்பரீட்சையில் முன் அனுபவம் இருக்கிறதா என கேட்பார்கள். அதுபோல் ஆட்சி அதிகாரம் செய்வதற்கு முன் அனுபவம் வேண்டும். ஆனால், எந்த முன் அனுபவமும் இல்லாத இவர்களால் எப்படி நல்லாட்சி செய்ய முடியும். இதுபோல்தான் 2019இல் எந்த முன் அனுபவமும் இல்லாத ஒருவருக்கு ஆட்சியை வழங்க வேண்டாம் என கூறினோம் . ஆனாலும், கோட்டாபய ஆட்சிக்கு வந்தார். அதுபோலவே இப்போதும் நடந்துள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் இந்த அரசாங்கம் ஆசை வார்த்தைகளைக் கூறி அதிகளவான வாக்கினை அள்ளிக் கொண்டனர். மக்கள் பல கனவுகளோடு வாக்களித்தனர். கனவுகள் கனவுகளாகவே மாறிவிட்டன.

இதன் காரணமாக எதிர்வரும் சித்திரை புத்தாண்டு முன்னர் மீண்டும் நாம் அன்றாட உணவுக்காக வரிசையில் நிற்கும் நிலை வரும் என்றார். இந்நிலையில், கிராமங்களுக்கான பாராளுமன்றமாகக் கருதப்படும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் சஜித் பிரேமதாசவை ஆதரித்து வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இதன் மூலம் பசித்தவர்கள் இல்லாத இலங்கையை உருவாக்க வேண்டியது நமது ஒவ்வொருவரதும் பொறுப்பு.

ஒலிவாங்கி மூலம் மாத்திரம் அவர்கள் பேசிக்கொண்டு வருகின்றனர். இதன் மூலம் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. ஆகவே மக்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்கு எனும் அதிகாரத்தைப் பயன்படுத்திச் சரியான தக்க பதிலடி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கோழி இறைச்சி, முட்டை விலைகள் குறைந்தன



850 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் தேவை குறைவதால் குறித்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர்.

பல்பொருள் அங்காடிகளில் பத்து முட்டைகள் கொண்ட ஒரு பெட்டி ரூ.500 முதல் ரூ.520 வரை விற்பனையாகிறது என்றும் நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர். இதற்கிடையில், தொகையாக விற்பனை செய்யப்படும் ஒரு கிலோ கோழி இறைச்சி ரூ.600க்கு விற்கப்படுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

## “தேசிய மறுமலர்ச்சிக்காக அணி திரள்வோம்"



**நண்பகல் 12 மணிக்கு கப்பலில் கடற்படையினரால் 25 மரியாதை வேட்டுக்கள் நடத்தப்படவுள்ளன**

குறைந்த செலவில், மக்களுக்கு ஏற்படும் அழுத்தம் குறைந்ததாக மற்றும் அதிக மக்களின் பங்களிப்புடன் இம்முறை சுதந்திர தின நிகழ்வுகளை நடாத்துவதற்கு அமைச்சர் திட்டமிட்டுள்ளது.

படைவீரர்கள் 1,870 என்ற எண்ணிக்கைக்கு முப்படை வீரர்களின் அணிவகுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இம்முறை படைவீரர்களின் அணிவகுப்பில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 1,511 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இம்முறை அணிவகுப்பிற்காக முப்படை வீரர்களின் வாகன அணி வகுப்பை நடத்தாத இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் 19 விமானங்கள் சுதந்திர தின வைபவத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், இம்முறை தேசிய கொடியை வானில் ஏற்றிச் செல்வதற்காக விமானங்கள் 3 மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன.

சம்பிரதாய முறைப்படி சுதந்திர தின நிகழ்வுகளுடன் இணைந்ததாக கடலில் நண்பகல் 12 மணிக்கு கப்பலில் கடற்படையினரால் 25 மரியாதை வேட்டுக்கள் நடத்தப்படவுள்ளன.

## இன்று லண்டனுக்கு செல்கிறார் ரணில்

லண்டன் - கொன்வே மண்டபவத்தில் 5ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ள இந்த நிகழ்வு அல் - ஜஷீரா தொலைக்காட்சியில் நேரடி ஒலிபரப்பு செய்யப்படவுள்ளது.

பொருளாதார ரீதியில் பாதாளத்தில் வீழ்ந்த இலங்கையின் மறுமலர்ச்சி திட்டம், ஊழல் மோசடி, மனித உரிமை மீறல் நெருக்கடிகளை எதிர்கொள்ளல் மற்றும் 2019ஆம் ஆண்டில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளினால் முன்னெடுக்கப்பட்ட உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை தாக்குதல்கள் போன்ற விடயங்கள் குறித்து ரணில் விக்கிரமசிங்க இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றவுள்ளார்.

இதனை தொடர்ந்து லண்டனில் தங்கியிருக்கும் நாட்களில் பல்வேறு அரசியல் சந்திப்புகளிலும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விகாரைக்கு அயலிலுள்ள காணியை மாற்றீடாக வழங்க ஆலோசனை

இந்தச் சந்திப்பின்போது, விகாரை தற்போது அமைந்துள்ள காணி தனியாருக்குச் சொந்தமானது என்றும் அது தொடர்பான ஆவணங்களையும் அவர்கள் இதன்போது சமர்ப்பித்திருந்தனர். திஸ்ஸவிகாரைக்குரிய காணி பிறிதொரு இடத்தில் அமைந்துள்ளது என்பதையும் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினர்.

விகாரை தற்போது அமைந்துள்ள காணிக்கு மேலதிகமாகவும் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த காணி உரிமையாளர்கள் அந்தக் காணியை விடுவித்துத் தருவதுடன், விகாரைக்குச் சொந்தமான அயலிலுள்ள காணியையும் மாற்றீடாக தமக்கு வழங்கவேண்டும் எனக் கோரியிருந்தனர்.

காணி உரிமையாளர்களது கோரிக்கைக்கு அமைவாக இது தொடர்பில் விகாராதிபதியுடனும், நயினாதீவு விகாரையின் விகாராதிபதியுடனும் ஆளுநர் பேச்சு நடத்திவருகின்றார். அத்துடன் இந்த இணக்கப்பாடு யோசனை தொடர்பில் புத்தசாசன அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு செல்வதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

## “உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தீர்க்கரமானது”

**தற்போதைய அரசாங்கமும் ஆட்சிக்கு வந்த பிறகு முறையான திட்டத்தைச் செயல்படுத்தாது, தற்காலிக நிவாரணங்களை வழங்கி வருகிறது. எனவே, குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த ஏழ்மையை போக்குவதற்கான இலக்குடனான திட்டம் வகுக்கப்பட வேண்டும்**

இதனூடாக பிரச்சினைகளுக்கு முறையான தீர்வுகளை பெற்றுக்கொடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சியில் இருந்து கொண்டு விவசாயிகளுக்காக குரல் எழுப்பி, நெல்லுக்கான நிர்ணய விலையை தீர்மானிப்போம், அதனை சட்டமாக்குவோம் என்று பிரஸ்தாபித்தனர். ஆனால், இன்று அமைச்சர் பதவிகளை வகித்துக் கொண்டு உர மானியமாக 25,000 ரூபாயை கூட உரிய நேரத்தில் வழங்க முடியாது போயுள்ளனர். ஒரு சாராருக்கு 15,000 ரூபாய் என்றும் மற்றுமொரு சாராருக்கு 10,000 ரூபாய் என்றும் வழங்கப்பட்டுள்ளதே தவிர, 25,000 ரூபாய் இன்னும் மொத்தமாக போய் சேரவில்லை என்றும் கூறியுள்ளார்.

குருநாகல், ஹிரியால தேர்தல் தொகுதியில் கும்புக்கடே பிரதேசத்தில் அமைந்துள்ள கசாகல புராண ரஜமஹா விகாரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் சனிக்கிழமை (01) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாடு வங்குரோத்து நிலையை எட்டியதோடு நாட்டின் பெரும்பாலான மக்களின் ஜீவனோபாயம் வீழ்ச்சி கண்டன. பலர் வறுமை நிலையை அடைந்தனர். இன்றும் நம் நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கான தெளிவான திட்டமொன்று இல்லை. தற்போதைய அரசாங்கமும் ஆட்சிக்கு வந்த பிறகு முறையான திட்டத்தைச் செயல்படுத்தாது, தற்காலிக நிவாரணங்களை வழங்கி வருகிறது. எனவே, குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த ஏழ்மையை போக்குவதற்கான இலக்குடனான திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

### இந்திய பட்ஜெட்டில் இலங்கைக்கு

## 300 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு

**இந்தியாவின் வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு சுமார் 1,032 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கை, பொருளாதார மந்த நிலையிலிருந்து மீண்டு வருவதால், அதற்கான ஒதுக்கீடு 245 கோடியிலிருந்து 300 கோடி இந்திய ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது**



இந்திய மத்திய அரசாங்கத்தால் சனிக்கிழமை(01) அன்று சமர்பிக்கப்பட்ட 2025 - 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் (பட்ஜெட்டில்) இலங்கைக்காக 300 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தி நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனனால் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த வரவு- செலவுத் திட்டத்தில், இந்திய வெளியுறவு அமைச்சுக்காக 20,516 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் வெளிநாடுகளுக்கு உதவிகளை வழங்குவதற்காக 5,483 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்டை நாடுகளில் நீர் மின் நிலையங்கள், வீட்டு வசதி, வீதிகள், பாலங்கள் மற்றும் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் போன்ற பாரிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கைக்கு இந்தியாவின் வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு சுமார் 1,032 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை, பொருளாதார மந்த நிலையிலிருந்து மீண்டு வருவதால், அதற்கான ஒதுக்கீடு 245 கோடியிலிருந்து 300 கோடி இந்திய ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

# மாவைக்கு அஞ்சலி...

மறைந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் சிரேஷ்ட தலைவர் மாவை சேனாதிராஜாவின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (02) அன்று மாவிட்டபுரத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது. இதன்போது அவரது பூதவுடலுக்கு பொதுமக்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்துவதைப் படங்களில் காணலாம்...



















# “தேங்காய் சம்பலும் சோறும் கொடுத்தார்கள்”

என்னை தடுத்து வைத்திருந்த வேளை பாயில் உறங்க கூறியதாகவும் தேங்காய் சம்பலும் சோறும் கொடுத்தார்கள் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அன்றைய தினம் சனிக்கிழமை நான் வீட்டிலிருக்கவில்லை. எனது குடும்பத்தினரும் வீட்டில் இருக்கவில்லை. இதனால் எனது வீடு பூட்டியிருந்தது.

நான் பெலியத்த இடமாறும் பகுதிக்கு அருகில் சென்றவேளை போக்குவரத்து பொலிஸை சேர்ந்த ஒருவர் எனது வாகனத்தை மறித்தார். முதலில் அவர் எனது வாகன பதிவு குறித்த ஆவணங்களைச் சோதனையிட்டார்.காப்புறுதி வாகன சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவற்றையும் அவர் சோதனையிட்டார்.

என்னைத் தடுத்து நிறுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டதாக அவர் தெரிவித்தார். சிஐடியினர் அந்த பகுதிக்கு வரும்வரை என்னை அங்கேயே இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அவர்கள் என்னை விசாரிக்கவுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

அங்கிருந்த அலுவலகத்தின் ஆசனத்தின் அமர்ந்திருக்குமாறு என்னை அவர் கேட்டுக்கொண்டார்

நான் பெலியத்தையில் உள்ள வீட்டிற்குச் சென்று அங்குக் காத்திருக்கின்றேன் என அவரிடம் தெரிவித்தேன்.

ஆனால் அவர் பணிவான முறையில் அதனை ஏற்க மறுத்து விட்டார்.

நான் எனது ஆதரவாளரின் திருமண வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தேன், நான் அவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு என்னால் திருமண நிகழ்வில் கலந்துகொள்ள முடியாது என தெரிவித்தேன்.

என்னைத் தடுத்துநிறுத்துவார்கள் என்பது எனக்குத் தெரியாத போதிலும், எனது வீட்டிலிருந்து நான் அதிவேக வீதியை நோக்கி பயணித்த ஆரம்பித்த தருணத்திலிருந்து இருவர் மோட்டார் சைக்கிளில் என்னைப் பின்தொடர்கின்றார்கள் என்பது



எனக்குத் தெரிந்திருந்தது.

சிஐடியினர் அங்கு வந்து சேர்ந்ததும் அவர்கள் என்னை தங்களது வாகனத்திற்கு வருமாறு அவர்கள் உத்தரவிட்டனர், அதன் பின்னர் கொழும்பிலுள்ள சிஐடியி தலைமையகத்திற்குப் புறப்பட்டோம் -இந்த பயணம் மூன்றரை மணித்தியாலங்கள் நீடித்தது.

ஐந்தரை மணியளவில் அவர்கள் என்னிடம் சிறு வாக்குமூலமொன்றைப் பதிவு செய்துவிட்டு கொழும்பு மேலதிக நீதவானின் இல்லத்திற்குக் கொண்டு சென்றனர்.என்னைத் தடுத்துவைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானை சிரிமல் பகுதியிலுள்ள 34 இலட்சம் ரூபா பெறுமதியான வீடு மற்றும் காணியை கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பில் நிதிச் சலவை தடுப்பு சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய யோஷித்த ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

# தீடிர் தீ பரவல்; 40 இலட்சம் ரூபாய் நஷ்டம்



■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி- காத்தான்குடி 3 எம்.சி அட்வகேட் அப்துல் காதர் வீதியிலுள்ள கையடக்க தொலைபேசி பழுது பார்க்கும் வர்த்தக நிலையத்தின் மீது ஏற்பட்ட தீப் பரவலினால் குறித்த வர்த்தக நிலையம் முற்றாக எரிந்துசேதமடைந்துள்ள சம்பவம் வெள்ளிக்கிழமை(31) இரவு இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து, பொதுமக்கள் இளைஞர்கள் உதவியுடன் மட்டக்களப்பு மாநகர சபை தீயணைக்கும் பிரிவினர் காத்தான்குடி நகரசபை தீ அணைக்கும் இயந்திரங்கள் மூலம் தீப் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ பரவலில் கையடக்க தொலைபேசி நிலையத்திலிருந்த கையடக்க தொலைபேசிகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட உபகரணங்கள் முழுமையாக எரிந்து சேதமடைந்துள்ளதுடன் இதனால் 40 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்தார்

இது தொடர்பில் ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் இராணுவத்தினர் பாதுகாப்புத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சனிக்கிழமை (01) காலை பொலிஸ் தடயவியல் அதிகாரிகளும் வருகை தந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். மின் ஒழுக்கு காரணமாக இந்த தீ பரவல் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கின்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு யுவதி மரணம்: ஜோடிக்கு பாதிப்பு

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த வெளிநாட்டுப் யுவதி ஒருவர் சனிக்கிழமை(01) அன்று திடீர் சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேற்படி விடுதியில் தங்கியிருந்த மூன்று வெளிநாட்டினர் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், 24 வயதுடைய இங்கிலாந்து யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏனைய இருவரும் ஜேர்மன் தம்பதியினராவர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# தங்க சங்கிலிக்காக பெண் படுகொலை

சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க சங்கிலியை அபகரிப்பதற்காக பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இரத்தினபுரியில் இடம்பெற்றுள்ளது.

இரத்தினபுரி - கலபட பகுதியில் கருகப்பட்டை தோட்டத்திலிருந்து பெண் ஒருவரின் சடலம் கடந்த 31ஆம் திகதி கைப்பற்றப்பட்டுள்ளது.

இரத்தினபுரி - பன்னில, நிரிஎல்ல பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட, இரண்டு பிள்ளைகளின் தாயான சுதுஹக்குருகே சோமாவதி (வயது 58) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணும் அவரது கணவரும் கடந்த நான்கு மாதங்களுக்கு முன் அவர்களது மகனுடன் ஏற்பட்ட முரண்பாட்டின் பின்னர் கணவனும் மனைவியும் கலபட பகுதிக்கு வந்து தனியாருக்குச் சொந்தமான காணியில் தங்கியிருந்து அவரது தோட்டத்தில் வேலை செய்து வந்துள்ளார்கள். நாளாந்தம் மாலையில் அந்த பெண்ணின் கணவன் கலபட சந்தியில் உள்ள வியாபார நிலையங்களுக்குச் சென்று வருவார்.

கடந்த 30ஆம் திகதி மாலை 6.30 மணி அளவில் வழமை போல் கலபட பகுதியில் உள்ள வியாபார நிலையத்திற்குச் சென்று சில பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டு திரும்பி வந்துள்ளார்.

வீட்டிற்கு வந்த கணவர் அவரது மனைவியைக் காணவில்லை என்பதால் அதிர்ச்சியடைந்து காவலாளியின் உதவியுடன் வீட்டைச் சுற்றித் தேடியுள்ளார்.

வீட்டைச் சுற்றித் தேடிக் கிடைக்காததால், 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அறிவித்த பின்னர் வேவல்வத்த பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸ் நிலைய அதிகாரிகள் அயலவர்களின் உதவியுடன் தேடிப் பார்த்த போது, வீட்டிலிருந்து சுமார் 150 மீட்டர் தொலைவில் உள்ள கருகப்பட்டைத் தோட்டத்திலிருந்து குறித்த பெண்ணின் சடலத்தைக் கண்டுள்ளார்கள்.

கடந்த 31ஆம் திகதி காலை சம்பவ இடத்திற்கு வந்த இரத்தினபுரி மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவினர் குறித்த பகுதியைச் சோதனை செய்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டார்கள்.

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியும் சம்பவ இடத்திற்கு வந்து குறித்த பகுதியைச் சோதனை செய்ததுடன் சடலத்தைப் பரிசோதனை செய்துள்ளார்.

மேலும் இரத்தினபுரி நீதிமன்றத்தின் கடமை நேர நீதவான் வருகை தந்து சம்பவ இடத்தை பார்வையிட்ட பிறகு சடலத்தைப் பிரேதப் பரிசோதனைக்காக இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த 1ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் அப் பெண் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அதே தோட்டத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 35 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# தொலைத்தொடர்பு கோபுரத்திலிருந்து விழுந்து ஒருவர் பலி

■ க.அகரன்



வவுனியா, மகாறம்பைக்குளத்தில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் இருந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் சனிக்கிழமை(01) மாலை இடம்பெற்றுள்ளது.

அனுராதபுரம், நிக்கவரெட்டிய பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய சதுரங்க ஹேரத் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி திருத்தப் பணிகளை முன்னெடுத்து வந்த குறித்த நபர் நிலைதடுமாறி கீழே விழுந்துள்ளார்.

இதனால் படுகாயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# அறிவோர் ஒன்று கூடல்

அறிவோர் ஒன்று கூடல் நிகழ்ச்சி மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் தை.தனராஜ் தலைமையில் புதன்கிழமை (05) மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்ச்சியில் ‘தூய்மையான இலங்கை; பாடசாலைக் கல்வி முறையில் சவால்களும் சமாளிப்புகளும்’ எனும் தலைப்பில் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் உரையாற்றவுள்ளார்.

# கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் மரணம்

பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து ஒரு வயது சிறுவன் உயிரிழந்துள்ளதாக மெதகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெல்கஹவத்த, மல்கஸ்தலாவ, மெல்லகம, மெதகம பகுதியைச் சேர்ந்த டி.எம். வினுர விதுல்க திசாநாயக்க என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் தந்தை வேலைக்குச் சென்ற நிலையில் சிறுவன் தனது தாய் மற்றும் பாட்டியுடன் வீட்டில் இருந்துள்ளனர். பாட்டி, வேலை செய்து கொண்டிருந்த வேளை சிறுவனுக்குப் பாலூட்டிக் கொண்டே தாய் தூங்கியுள்ளார்.

சிறிது நேரம் கழித்து தாய் தனது மகனைத் தேடியபோது, வீட்டிலிருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் உள்ள கிணற்றில் விழுந்திருப்பதைக் கண்டுள்ளார். அவரை மீட்டு மெதகம பிராந்திய மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். அங்குச் சிறுவனைப் பரிசோதித்த போது, வரும் வழியிலேயே இறந்து விட்டதாக அறிவித்துள்ளனர்.


## வேலை வாய்ப்பு

கொழும்பிலுள்ள சுற்றுலா விடுதிக்கு கேயார்டேக்கர் / ரூம்போய் தேவை. நன்றாக சமைக்கக்கூடிய, சுத்தம் செய்யக்கூடிய மற்றும் ஆங்கிலத்தில் பேசக்கூடியவர்கள் கீழ் காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் அல்லது வாட்ஸ் அப் மூலம் உங்களது சுயவிபரக்கொவையை (Bio Data) வை அனுப்பவும்.

தொடர்புக்கு: 0774 366 273

# புது வாகனம் – ஐந்தாண்டுகளாகியும் தொடரும் கனவு

வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படுவது, அதன் விலைகள், வரிகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பன தொடர்பாக, கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலாக நாட்டின் ஏனைய பிரச்சனைகளை மூடி மறைக்கும் ஒரு பேசு பொருளாக அமைந்திருந்த நிலையில், கடந்த வார இறுதியில் வாகன இறக்குமதி தொடர்பில் அரசிடமிருந்து தெளிவான விளக்கம் வழங்கப்பட்டிருந்தது.

ஐந்தாண்டுகளாக வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படாமல், தற்போது அதற்கான அனுமதி கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வரும் நிலையில், முதலில் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான லொறி, பொதுப் பிரயாண சேவைக்கான பேருந்துகள், ட்ரக் வண்டிகள் போன்றவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில், ஒன்பது நிபந்தனைகளுடன் தனியார் பாவனைக்கான கார் வகைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஒன்பது நிபந்தனைகளும் வாகன கொள்வனவைக் கட்டுப்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. முன்னர் வாகன இறக்குமதி சாதாரணமாக நடைபெற்ற காலப்பகுதியில் வருடமொன்றில் 1.5 - 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் வாகன இறக்குமதி மேற்கொள்ளப்பட்டிருந்ததாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஐந்தாண்டுகளாக வாகன இறக்குமதிக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அனுமதி வழங்கப்படுகையில் அளவுக்கதிகமான கேள்வி எழுந்தால், ஏற்படக்கூடிய நெருக்கடி நிலையைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியிடம் இருக்கும் அந்நியச் செலாவணியிலிருந்து வாகனம் இறக்குமதி செய்யப்படுவதில்லை. நாட்டுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி வருமானத்தைப் பயன்படுத்தி இறக்குமதி மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக, சுற்றுலாத் துறை மேம்பட்டுள்ளது, இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளினூடாக கிடைக்கும் வருமதிகள், வெளிநாடுகளில் பணிபுரிவோர் நாட்டுக்கு அனுப்பும் பணம் போன்ற விடயங்களை சில உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவற்றிலிருந்தே இறக்குமதிக்கான பணம் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, வாகன இறக்குமதியால் அந்நியச் செலாவணி இருப்பு குறைந்துவிடும் எனும் வாதம் செல்லாது. நாட்டின் வருடாந்த மொத்த இறக்குமதி 20 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அப்பாலானதாக அமைந்துள்ளது. ஆனாலும், மத்திய வங்கியின் கையிருப்பு 6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே.

வாகன இறக்குமதிக்காக விதிக்கப்பட்டுள்ள வரிகளை எடுத்துப் பார்த்தால், சிறிய அளவிலான வாகனம் ஒன்றும் சுமார் 80 - 90 இலட்ச ரூபாய்களைத் தொடும் என அனுமானிக்க முடிகின்றது. உயர்ந்த வரி விதிப்பினூடாக, அரசாங்கம் தமக்கான வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் இதனூடாக திட்டமிட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எனவே, வாகனம் கனவு நனவாகும் எனும் நிலை மாறி, வாகனம் ஒன்றை வாங்குவதே கனவாக மாறும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வெறுப்பு உணர்வு சந்தோஷத்துக்கு வேட்டு. எந்த நேரமும் முகத்தைக் கோணலாக வைத்தபடி, எதனையோ இழந்தபடி இருப்பவர்கள் எவர்தான் ரசித்து மகிழப் போகின்றார்கள்.

வாழ்க்கையை ரசிக்கத் தெரியாதவர்கள் எல்லாவற்றையும் கைவிட்டது போல் நடப்பதுண்டு. தொடர்ந்து துன்பங்கள், தோல்வி, நினைத்தவை நடக்காவிட்டால் அதிலிருந்து மீளும் வரை சோக இருளில், தங்கள் உருவத்துடன் வெறுத்து உலர்ந்த நிலையில் இருப்பது துணிச்சலற்ற நிலையைக் காட்டுகின்றது.

அவரவர் கஷ்டங்கள் அவரவர்களுக்குகே தெரியும் என்பார்கள். ஆனால், கஷ்ட, நஷ்டங்களைச் சந்திக்காதவர்கள் எவருண்டு.

பிரச்சினைகளை அப்படியே நிலையாக வைத்தபடி, அடுத்து உடன் எழுந்து களையாமல் இருப்பது தன்னைத்தான் சிதைப்பதாக அமையும். பழையதைத் துறந்து, புது வழி தேடுதலைச் சிரமம் எனக் கருதலாகாது. பலவீனத்துடன் வாழ்வது எழுச்சியைக் களைவது போலாகும். எழுவது சிரமம் அல்ல. சும்மா இருப்பதே கடினம். செயல்படுவது மேல்.

நன்றி- பருத்தியூர் பால.வயிரவநாதன்

லக்ஸ்மன்

# புதிய மாற்றம் ஏதுமில்லை

தேசிய மறுமலர்ச்சிக்காக அனைவரும் அணி திரள்வோம் என்ற தொனிப்பொருளில், இலங்கையின் 77ஆவது சுதந்திரதின நிகழ்வு நாளைய தினம் நடைபெறவிருக்கிறது.

இதுவும் வழமைபோலவே பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் 80 மில்லியன் ரூபா செலவில் நடைபெறவிருக்கிறது. ஒவ்வொரு சுதந்திர தினத்திலும் தமிழ் மக்கள் பல்வேறு எதிர்பார்ப்புகளுடனே இந்த நாளைக் கடத்துவது வழமை. அந்தவகையில்தான், கடந்த பல வருடங்களாக இலங்கையின் சுதந்திர தினத்தினை கருப்பு தினமாக வெளிப்படுத்தி வருகின்றனர். இம்முறையும் அதுபோன்ற அறிவிப்பு வெளிவந்திருக்கிறது.

இலங்கையில் ஆயுத யுத்தம் முள்ளிவாய்க்காலுடன் மௌனிக்கச் செய்யப்பட்டு 15 வருடங்கள் கடந்த நிலையிலும் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கான முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. தொடர்ந்தும் தமிழ் மக்களின் உரிமைகள் மீறப்படுவதோடு இருப்பும் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. ஆட்சிகளும், ஆட்சியாளர்களும் மாறுகின்றனரே தவிர, தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு விடயத்தில் முன்னேற்றகரமான எந்தவொரு வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகளுக்கான தீர்வு என பல்வேறு விடயங்களுக்குத் தீர்வில்லை என்ற வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் இலங்கையின் சுதந்திரதினக் கரிநாள் அறிவிப்பில் தெரிவித்திருக்கின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்தல் காலத்தில் வழங்கிய எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்ற முடியாத, ஏற்கெனவே அரச சக்கரத்தில் இணைந்திருக்கின்றவற்றைக் கொண்டுநடத்துகின்ற, செயற்படுத்துகின்றதொன்றாகவே இருந்து வருகிறது. இது மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதான அவநம்பிக்கையை உருவாக்கியிருக்கிறது. இந்தச் சுதந்திர தினத்துக்குப் பின்னர்தான் இந்த அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இந்த வரவு-செலவுத் திட்டம் மக்களது மனதிலும் வயிற்றிலும் பாலை வார்க்க வேண்டுமென்று ஒவ்வொருவரும் எதிர்பார்க்கின்றனர். இந்தப் பால் வார்ப்பு என்பது பல்வேறு விடயங்களை உள்ளடக்கியது. சாதாரண மக்கள் அன்றாடப் பொருட்களுக்கான விலைக் குறைப்பு, வாழ்வாதாரம் தொடர்பிலான நிவாரணங்களை தங்களுக்காக அரசாங்கம் அள்ளிக் கொடுக்கும் என்று நம்புகின்றனர். அரசாங்க மற்றும் தனியார் உத்தியோகத்தர்கள். ஊழியர்கள் சம்பள அதிகரிப்பை எதிர்பார்த்திருக்கின்றனர்.

இருந்தாலும், வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தாம் சுதந்திரம் பெற்றவர்களாக இலங்கை நாட்டுக்குள் இதுவரை தம்மை இணைத்துக் கொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும். அந்த இணைப்புக்கு அவர்கள் முழுமையான விருப்பமுடையவர்களாக இருக்கின்ற போதும் அது நடைபெறுவதற்கான ஏதுநிலைகளை 77 வருடங்களாக இலங்கையின் ஆளும் தரப்பினர் உருவாக்கிக் கொடுக்கவில்லை. ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்கான வேலைகளைத் தொடங்கியிருக்கிறது. கடந்த அரசாங்கங்களின் ஆட்சிக் காலங்களில், அரசியலமைப்பு உருவாக்கம், திருத்தம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் இருக்கின்ற போதும், இப்போதைய அரசாங்கம் புதிய அரசியலமைப்பினையே உருவாக்குவோம் என்று அறிவித்திருக்கிறது. இதற்குள் ஏற்கெனவே முன்னெடுக்கப்பட்ட விடயங்களின் முடிவுகளும், முயற்சிகளும் சேர்த்துக் கொள்ளப்படுமா என்பது குறித்தும் அரசாங்கம் எந்தக் கருத்துகளையும் முன்வைக்கவில்லை. இருந்தாலும், ஒவ்வொரு தடவைகளிலும் புதிய அரசியலமைப்புக்கான வேலைகளை ஆரம்பிப்பதும் இடை நடுவில் கைவிடப்படுவதும் நடைபெறுவது வழமையாக மாறிப்போன. நாட்டில் இம்முறை அது திருத்தமானதாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாம்.

அந்தவகையில்தான் தமிழர்களின் தீர்வு எட்டப்படும் வரை போராடியே ஆகவேண்டும் என்பதே வரலாற்று உண்மை என்ற அடிப்படையில் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. சர்வதேச நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புக்களும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்குமாறு தொடர்ந்தும் கூறிக் கொண்டிருக்கையில், அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பொலிஸார் கைவிடாது மக்கள் மீது நெருக்கடிகளைக் கொடுத்த வண்ணமிருக்கின்றனர். அவ்வாறானால், அரசாங்கத்தினால் இன்னமும் எந்தவிதமான அறிவுறுத்தல்களும் கொடுக்கப்படவில்லை என்பதே பொருளாகும் என்று கொள்ளமுடியும்.

இதுவரையில் அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் நீக்கம் பற்றி எந்தவிதமான கருத்துக்களையும் உறுதியாக வெளியிடவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள், கொடுமைகளை அனுபவித்த மக்கள் தங்களுக்கான நீதியைத் தொடர்ச்சியாகக் கோரி வருகின்ற நிலையே தொடர்கின்றது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க எமது நாட்டு மக்களின் நீண்ட கால கனவாகக் காணப்பட்ட தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளதாகக் கூறிவருகிறார். அத்தோடு, அரசியல் ரீதியாக தமக்குப் பல நிலைப்பாடுகள் இருந்தாலும், நாட்டில் இனவாத அரசியலுக்கு இடம் கொடுக்கப்போவதில்லை. எந்த விதத்திலும் மதவாதச் செயற்பாடுகள் எழுச்சி பெறுவதற்கும் இடமளியோம். நாம் போதுமென்ற அளவில் இனவாதத்தினால் பாதிப்பைக் கண்டவர்கள். ஆறுகள் நிறையக் கண்ணீரைக் கண்டோம். ஒவ்வொருவர் இடையிலும் பொருளாதாரம், ஜனநாயகம் என்று பல வகைகளிலும் குரோதமும் சந்தேகமும் அதிகளவில் வலுப்பெற்றுள்ளது. இனி எவரும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இனவாத, மதவாத போராட்டங்களை முன்னெடுக்க இடமளியோம் என்று அறிவித்திருந்தார். ஆனால், கடந்த காலங்களைப் போல, ஆட்சி வேறு அதிகாரம் வேறு, நிருவாகம் வேறென்ற நிலைமை உருவாகாதிருப்பதை அவர் உறுதிப்படுத்துவதே இதில் முக்கியமானது. இருந்தாலும், அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

ஏனெனில், ஏற்கெனவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரணைகள் முடக்கி விடப்பட்டிருந்தவர்களுக்கு எதிரான விசாரணைகள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. இந்தத் தொடர்ச்சி அதனையே காண்பித்து நிற்கின்றன.

வகுப்பறைக்குள் கற்பித்துக் கொண்டிருந்த கிளிநொச்சி, கோணாவில் மகா வித்தியாலய ஆசிரியர் இன்னாசிமுத்து சத்தியசீலனை, பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் பரந்தன் பிரிவின் இரண்டு அதிகாரிகள் ஜனவரி 20ஆம் திகதி பாடசாலையின் அதிபருக்கு அறிவிக்காமல் வகுப்பறைக்குள் நுழைந்து விசாரணை நடத்தியிருக்கின்றனர்.

14 மார்ச் 2024 அன்று, கோணாவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின்போது, தமிழர்கள் வாழும் பகுதிகளைக் குறிக்கும் வகையிலான இலங்கையின் வரைபடத்தை ஒத்த வடிவமைப்பு ஒன்றின் ஊடாக இல்லம் ஒன்று அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைப் பல தடவைகள் அழைத்த பயங்கரவாத பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை நடத்தியிருக்கின்றனர்.

2024ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பொதுத் தேர்தலுக்கு முன்னதாக கொழும்பிலுள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் தலைமையகத்திற்கு அழைக்கப்பட்ட குறித்த ஆசிரியர் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார். அவர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றீர்களா? என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. அதில், சம்பந்தப்பட்ட மாணவர்கள், பெற்றோரின் பெயர் விபரங்கள் கோரப்பட்டபோது அவர் அவற்றினை வழங்க மறுத்திருக்கிறார். அதன் பின்னர்தான் ஜனவரி மாதத்தில் மீண்டும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் பாடசாலைக்கு வருகை தந்திருக்கின்றனர். நீங்கள் எங்களுக்கு நாம் கோரும் தகவல்களைத் தர வேண்டும். ஒத்துழைப்பு தர வேண்டும். இல்லையேல் கொழும்பிற்கு உங்களை மீண்டும் அழைக்க வேண்டியேற்படும். உங்களைக் கைது செய்ய வேண்டியேற்படும் என எச்சரித்துச் சென்றிருக்கின்றனர்.

ஜனவரி 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். அதேபோல், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், அது எங்கள் இலட்சியமோ கொள்கையோ அல்ல, ஆனால், புதிய சட்டம் தயாரிக்கப்படும் வரை நாட்டின் சட்டங்களை நாங்கள் மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறானால், இதுபோன்ற நடவடிக்கைகள் தொடரும் என்பதே அரசாங்கத்தின் முடிவு.

மொத்தத்தில் புதிதான மாற்றம் ஒன்றும் ஏற்பட்டு விடப் போவதில்லை. நடப்பதையே மக்கள் எதிர்கொள்ள வேண்டுமென்றே தீர்மானத்துக்கு வர முடிகிறது. இந்தத் தீர்மானம் கடந்த கால அரசாங்க காலங்களின் தீர்மானங்களிலிருந்து வித்தியாசம் எதனையும் காண்பிக்கப் போவதில்லை. தனி நபரோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ தாமே தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மாற்றம் ஒன்றே மாறாதது. நாட்டுக்கு உள்ளேயும் ஒன்றும் நடைபெறப்போவதில்லை. நாட்டுக்கு வெளியேயும் எதுவும் நடைபெறாது என்ற முடிவுக்கே வரலாம். எது நடைபெற்றாலும் நடைமுறைகள் ஒன்றுதான். அவ்வளவே.

## கடிதங்கள்

### வீதியை செப்பனிட்டு தருமாறு கோரிக்கை

யாழ்.வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் போதியளவு மருத்துவ வசதி இல்லாத காரணத்தினால் அதிகமாக நோயாளர்களை நோயாளர் காவு வண்டியினூடாக வடமராட்சி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மருதங்கேணி - பருத்தித்துறை வீதியானது ஆங்காங்கே உடைந்து காணப்படுவதால் அவசரமாகச் சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களை விரைவில் கொண்டு சேர்க்க முடியாது துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாகவும் வீதி சரியான முறையில் செப்பனிடப்பட்டால் 45 நிமிடத்தில் செல்லும் நோயாளர் காவு வண்டியானது 15 நிமிடத்திலேயே பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையைச் சென்றடையும் என்றும் குறித்த மருதங்கேணி - பருத்தித்துறை வீதியினைச் சரியான முறையில் செப்பனிட்டுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை வைப்பதாகவும் மருதங்கேணி பிரதேச வைத்திய சாலையின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

- எஸ்.தில்லைநாதன்

# முன்பள்ளி கல்வியை மேம்படுத்த கொமர்ஷல் வங்கி UNICEF உடன் கைகோர்ப்பு




இலங்கையில் முன்பள்ளி கல்வியை மேம்படுத்துவதற்காக கொமர்ஷல் வங்கி, ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) மற்றும் அரசாங்க பங்குதாரர்களுடன் கைகோர்த்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதற்கிணங்க ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தில் முன் பள்ளி கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்கப் பங்காளர்களுக்கு உதவியாக செயற்படும் UNICEF பணிக்கான பங்களிப்பாக, முன்பள்ளியை மேம்படுத்துவதற்கு கொமர்ஷல் வங்கி ஆதரவளிக்கவுள்ளது. பாதுகாப்பான, மிகவும் சமமான, தரமான பாலர் கற்றல் சூழல்களை வழங்குவதற்கான மாகாணத்தின் முயற்சிகளுக்கு இந்த பங்குடைமை ஆதரவை வழங்கும் என எதிர்பார்க்கலாம்.

இத்திட்டத்தில் முழுப் பாடசாலையையும் புதுப்பித்தலுடன், மேம்படுத்துதல் மற்றும் தரமான தளபாடங்கள் மற்றும் கற்பித்தல்-கற்றல் உபகரணங்களை வழங்குதல் என்பன அடங்குகின்றன.

2022ஆம் ஆண்டு முதல் UNICEF, அதன் பங்குதாரர்களின் நிதியுதவியுடன், பின்தங்கிய பகுதிகளில் உள்ள 40 முன் பள்ளிகளின் கற்றல் சூழலை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஊவா மற்றும் மத்திய மாகாண அலுவலகங்களுக்கு ஆதரவளித்து வருகிறது.

இந்த தனியார்-அரசாங்க பங்குடைமையானது, ஆரம்ப வயதுக் கல்வியை வலுப்படுத்தவும், தரமான முன்பள்ளி கல்வியுடன் மிகவும் பின்தங்கியவர்களை அடைவதன் மூலம் இளம் மாணவர்களின் வளர்ச்சியை மேம்படுத்தவும் பங்குதாரர்களை ஒன்றிணைப்பதற்கான ஒரு புதிய முன்மாதிரியை பிரதிபலிக்கிறது.

கொமர்ஷல் வங்கியானது உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கை வங்கியாகும், மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. வங்கியானது இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) துறைக்கு மிகப்பெரிய கடனுதவி வழங்குவதோடு, டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. மற்றும் இலங்கையின் முதல் 100% காபன் நடுநிலைமை வங்கியாகும். கொமர்ஷல் வங்கியானது நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கிளைகள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் வலையமைப்பைச் செயல்படுத்துகிறது, மேலும், இலங்கை வங்கிகளுக்கிடையில் பரந்த சர்வதேச வலையமைப்பைக் கொண்டுள்ளது, பங்களாதேஷில் 20 வங்கிக்கிளைகள், மியன்மாரில் ஒரு நுண்நிதி நிறுவனம் மற்றும் மாலைத்தீவில் பெரும்பான்மையுடன் கூடிய முழு அளவிலான முதற்தர வங்கியாகவும் செயற்படுகின்றது. வங்கியின் முழு உரிமையைக் கொண்ட சொந்தமான துணை நிறுவனமான CBC ஃபைனான்ஸ் லிமிடெட் அதன் சொந்த கிளை வலையமைப்பின் மூலம் பரந்த அளவிலான நிதிச் சேவைகளையும் வழங்குகிறது.

# TAGS விருதுகள் 2024இல் Prime Lands Residencies தங்க விருது

TAGS விருதுகள் 2024 நிகழ்வில், Prime Lands Residencies PLC, காணி மற்றும் சொத்துக்கள் நிறுவனங்கள் பிரிவில் பெருமைக்குரிய தங்க விருதை சுவீகரித்தது. ஒழுக்கம், நிலைபேறாண்மை மற்றும் வெளிப்படையான வியாபார செயன்முறைகள் மற்றும் டிஜிட்டல் தூர நோக்குடைய கூட்டாண்மை அறிக்கையிடல் போன்றவற்றில் சிறப்பாக கவனம் செலுத்தியிருந்தமைக்காகவும், கூட்டாண்மை சிறந்த செயற்பாடுகளுக்காகவும் நிறுவனத்தின் உறுதியான அர்ப்பணிப்பை இந்த தங்க விருது பிரதிபலித்திருந்தது.




இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையில் நிறுவனம் தொடர்ச்சியாக பேணி வரும் தலைமைத்துவத்துடன், இந்த சாதனை பொருந்தும் வகையில் அமைந்திருப்பதுடன், கடந்த ஆண்டின் TAGS விருதுகள் வழங்கலில் பெற்றுக் கொண்ட வெள்ளி விருதிலிருந்து, குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Prime Lands Residencies PLC இன் தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "கூட்டாண்மை அறிக்கையிடல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றில் உயர் நியமங்களை பேணுவதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக இந்த தங்க விருது அமைந்துள்ளது. அறிக்கையிடல் செயன்முறையில் டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்பாடுகளை நாம் முன்னெடுக்கும் நிலையில், பொறுப்புக்கூறல் மற்றும் நிலைபேறாண்மை போன்ற பிரதான பெறுமதிகளை நாம் தொடர்ந்து பேணுவதுடன், அவை எப்போதும் Prime Group இன் வரையறைகளை நிர்ணயிப்பதாக அமைந்துள்ளன" என்றார்.

2023-2024 நிதியாண்டில் Prime Lands Residencies PLC உறுதியான வினைத்திறனை வெளிப்படுத்தியிருந்ததுடன், சவால்கள் நிறைந்த சந்தை சூழ்நிலைகளில் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் மீண்டெழுந்திறனையும் காண்பித்திருந்தது. The 43, By the Sea in Dehiwala, The Colombo Border மற்றும் The Seasons in Colombo 08 ஆகியன ரியல் எஸ்டேட் துறையில் நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வெளிக்காண்பித்திருந்தன.

TAGS விருதுகளினூடாக வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆளுகை மற்றும் நிலைபேறாண்மை போன்றன வெளிப்படுத்தப்படுவதுடன், பரிபூரண கூட்டாண்மை அறிக்கையிடலுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டு, நிதிசார் மற்றும் நிதிசாரா தகவல் வெளிப்படுத்தல்களில் கவனம் செலுத்துகிறது.

இவ் விருதுகள் வழங்கும் நிகழ்வில் விசேட விருந்தினர்கள் பங்கேற்றிருந்ததுடன், வெளிப்படைத்தன்மை மற்றும் ஆளுகை ஆகியவற்றில் அடிப்படை கொள்கைகளை பேணி, கூட்டாண்மை அறிக்கையிடலில் டிஜிட்டல் ஒன்றிணைப்பின் முக்கியத்துவ அதிகரிப்பை வெளிப்படுத்தியிருந்தது. இவ் வைபவம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றதுடன், CA ஸ்ரீ லங்காவின் 59ஆவது வருடாந்த அறிக்கையிடலில் சிறப்பு கௌரவிப்பு நிகழ்வாக அமைந்திருந்தது.



# கலாமித்திரா விருது விழா...

கடந்த 44 ஆண்டுகால பாரம்பரியத்தைக் கொண்ட புதிய அலை கலை வட்டம் கடந்த 2025 ஜனவரி 30ஆம் திகதி 45ஆவது அகவைக்குள் கால் பதித்துள்ளது.

அன்றைய நாளில் இது தனது மகளிர் அணி ஒன்றையும் அங்குரார்ப்பணம் செய்து வைத்ததுடன் அந்த அமைப்பின் ஏற்பாட்டில் இம்முறை கலாமித்திரா விருது விழாவை நடத்தியுள்ளது.

கொழும்பு-11 செட்டியார் தெருவில் அமைந்துள்ள கல்யாண முருகன் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக புரவலர் புத்தகப் பூங்கா மற்றும் ஹாசிம் உமர் அறக்கட்டளையின் நிறுவனர் ஹாசிம் உமர் கலந்து கொண்டுள்ளார்.

புதிய அலை கலை வட்டத்தின் நிறுவனர் ராதாமேத்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஊடகத்துறையைச் சார்ந்த பெண்கள் பத்து பேர் கலாமித்திரா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.















அமெரிக்கா

## அமெரிக்க பொருட்களுக்கு

# வரி விதிப்பு



அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கனடா 25 சதவீத வரி விதித்துள்ளது.

பல்வேறு நாடுகள் மீதும் டொனால்ட் ட்ரம்ப் அதிரடி வரி விதிப்பில் ஈடுபட்டு வருகிறார். அந்த வகையில், கனடா, மெக்சிகோ ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதமும், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதமும் வரி விதித்து ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவு நேற்று (2) முதல் அமுலுக்கு வருகிறது.

இந்நிலையில், அமெரிக்கா விதித்த இறக்குமதி வரிக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் கனடாவும் வரி விதித்துள்ளது.

அதன்படி, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று கனடா அறிவித்துள்ளது. இந்த இறக்குமதி வரி நேற்று (2) முதல் அமுல்படுத்தப்படும் என்றும், கனடா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா

## 7,000 இந்திய மாணவர்களுக்கு சிக்கல்



அமெரிக்காவில் 7,000க்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள் சட்டவிரோதமாக தங்கியுள்ளனர்.

இது குறித்து அமெரிக்க குடியேற்றக் கல்வி மையத்தைச் சேர்ந்த ஜெசிகா எம்.வேகன் கூறியதாவது, “அமெரிக்க பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங் களில் வெளிநாட்டு மாணவர்கள் கல்வி பயில எப் 1 விசா வழங்கப்படுகிறது. இதேபோல கல்விச் சுற்றுலா வரும் வெளி நாட்டு மாணவ, மாணவியருக்கு எம் 1 விசா வழங்கப்படுகிறது. இந்தியா, சீனா, பிரேசில், கொலம்பியா நாடுகளில் இருந்து எப்1, எம்1 விசா பெற்று அமெரிக்கா வரும் மாணவர்கள் விசா காலம் முடிந்த பிறகும் தொடர்ந்து சட்டவிரோதமாக தங்கி உள்ளனர். இதில் மிக அதிகபட்சமாக இந்தியாவைச் சேர்ந்த சுமார் 7,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கின்றனர்.

“எச்1பி விசா பெற்றும் அமெரிக்காவில் பணியாற்றும் வெளிநாட்டினரும் விசா காலம் முடிந்த பிறகும் இங்கேயே தங்கி உள்ளனர் என்றார்.



உக்ரைன்

## உக்ரைன் எல்லையில் இருந்த

## வடகொரிய வீரர்கள் வெளியேற்றம்

உக்ரைன் மீதான ரஷியா போரில் உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகள் செயற்படுகின்றன. அந்த நாடுகள் ஆயுத விநியோகம் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்குகின்றன.

அதேபோல் நட்பு நாடான வடகொரியா 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களை ரஷ்யாவுக்கு அனுப்பியது. ரஷியா அந்த வீரர்களை உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள குர்ஸ்க் பிராந்திய எல்லை அருகே நிறுத்தியது.

ஆனால் உக்ரைனின் தாக்குதல் மற்றும் மோசமான வானிலையை அவர்களால் தாக்குப்பிடித்து நிற்க முடியவில்லை. இதனால் சுமார் 4,000 வடகொரிய வீரர்கள் காயமடைந்தனர். எனவே, குர்ஸ்க் எல்லையில் இருந்து அவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

உக்ரைனின் சரமாரி தாக்குதலில் பலர் இறந்ததால் வடகொரியா வீரர்களைப் பின்வாங்கும் கட்டாயம் ரஷ்யாவுக்கு ஏற்பட்டு இருக்கலாம் என, உக்ரைன் இராணுவ செய்தித்தொடர்பாளர் அலெக்சாண்டர் கிண்ட்ராடென்கோ தெரிவித்துள்ளார்.

உத்தர் பிரதேசம்

## கார் விபத்தில் ஐவர் மரணம்



கும்பமேளாவில் பங்கேற்றுவிட்டு நேபாளத்துக்குத் திரும்பிய கார் விபத்துக்குள்ளானதில், ஐவர் உயிரிழந்துள்ளனர்.

உத்தரப் பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் நகரில் மகா கும்பமேளா நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. வரும் 26ஆம் திகதி வரை நடைபெறும் இந்நிகழ்ச்சியில், உலகிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் கலந்து கொள்கின்றனர்.


இதனிடையே, நேபாளத்தைச் சேர்ந்த 9 பேர் காரில் உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜ் நகருக்கு வந்து கும்பமேளாவில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில், கும்பமேளாவில் பங்கேற்றுவிட்டு நேற்று 9 பேரும் காரில் நேபாளத்துக்குப் புறப்பட்டுள்ளனர்.

பீகாரின் முசாபர் நகர் மாவட்டம் மதுபானி நகரில் தேசிய நெடுஞ்சாலையில் கார் சென்றுகொண்டிருந்தபோது, அதேசாலையில் சிலர் பைக் சாகசம் செய்துகொண்டிருந்தனர். பைக்கில் சாகசம் செய்தவர்கள் மீது மோதுவதைத் தவிர்க்க முயன்றபோது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார், சாலையின் தடுப்புச்சுவர் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் காரில் பயணித்த நேபாளத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்தனர். மேலும், 4 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர்.



கர்நாடக மாநிலம்

## கருணை கொலை

குணப்படுத்த முடியாத நோயால் பாதிக்கப்பட்டு வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படும் நோயாளிகளைக் கருணை கொலை செய்வதற்கு கர்நாடக அரசு அனுமதி அளித்துள்ளது.

இது குறித்து கர்நாடக சுகாதாரத்துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ், பெங்களூருவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கூறியதாவது,


குணப்படுத்த முடியாத நோயால் பாதிக்கப்பட்டு வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படும் நோயாளிகளுக்குக் கண்ணியமாக இறப்பதற்கான உரிமை உள்ளது என 2018ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் ஒரு வழக்கில் தீர்ப்பளித்துள்ளது. 2023இல் இதற்கான விதிமுறைகளையும் உச்ச நீதிமன்றம் வகுத்து அளித்துள்ளது.

அதன்படி, தீராத நோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைய முடியாமல் தவிக்கும் நோயாளிகள் கண்ணியத்துடன் இறப்பதற்கான உரிமையை வழங்கக் கர்நாடக அரசு முடிவெடுத்துள்ளது.

இந்த முடிவை எடுப்பதற்கு முன்பாக, கருணைக் கொலையை அனுமதிப்பது குறித்து 3 மருத்துவர்களைக் கொண்ட 2 குழுக்கள் பரிசோதனை மேற்கொண்டு முடிவெடுக்கும்.

இந்த முதன்மை, இரண்டாம் நிலைக் குழுவில் ஒரு அரசு மருத்துவர் இருப்பார். மாவட்டம் தோறும் இந்த மருத்துவ நிபுணர் குழு அமைக்கப்படும்.

அந்த குழுவைச் சேர்ந்த மருத்துவர் கள், உயிர்பிழைக்க வாய்ப்பே இல்லை என உறுதி செய்த பிறகு. நோயாளி கண்ணியமாக கருணை கொலை செய்யப்படுவார்” என்றார்.



## ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# அஸ்பன்யோலிடம் தோற்ற மட்ரிட்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், அஸ்பன்யோலின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் தோற்றது.

அஸ்பன்யோல் சார்பாகப் பெறப்பட்ட கோலை கார்லோஸ் றொமேரோ பெற்றிருந்தார்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 49 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்ரிட் காணப்படுகின்றது. 48 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 42 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் பார்சிலோனாவும், 40 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிக் பில்பாவும் காணப்படுகின்றன. இதில் பார்சிலோனா, பில்பாவோ ஆகியன மற்றைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.

## மெய்வல்லுனர் போட்டி



யா/வடமராட்சி மத்திய மகளிர்கல்லூரியின் இல்லங்களுக்கு இடையிலான வருடாந்த மெய்வல்லுனர்போட்டி இன்று திங்கட்கிழமை(03) பிற்பகல் 1.30 மணி முதல் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி சத்தியபாமா நவரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள மெய்வல்லுனர்போட்டியின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் மோகனசுந்தரம் தெய்வேந்திரா (கல்வி,கல்வி நிர்வாகம் ) கலந்துகொள்ளவுள்ளார்.



## அகில இலங்கை திறந்த தேசிய பூப்பந்தாட்டத் தொடர்:

## சம்பியனான சமரரத்ன, ரஸ்மி பாக்கியா முதலிகே

எம்.எஸ்.எம்.நூர்தீன்

அகில இலங்கை திறந்த தேசிய பூப்பந்தாட்டத் தொடரில் திறந்த ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் செனுக் சமர ரத்ன, ஆண்களுக்கான திறந்த இரட்டையர் பிரிவில் துலிப் பள்ளே குரு மற்றும் ஒசாமிக்க கருணாரத்ன, பெண்களுக்கான திறந்த ஒற்றையர் பிரிவில் ரஸ்மி பாக்கியா முதலிகே, பெண்களுக்கான திறந்த பிரிவில் ரஸ்மி பாக்கியா முதலிகே மற்றும் வரங்கனா ஜெயவர்த்தனா, இரட்டையருக்கான திறந்த கலப்பு போட்டியில் துலிப் பல்லே குரு மற்றும் பாஞ்சாலி அதிகாரி, 70 வயதுக்கு மேற்பட்ட போட்டியில் மட்டக்களப்பைச் சேர்ந்த தங்கவேல் சந்திரசேகரம் ஆகியோரும் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.



## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## லெய்செஸ்டரை வீழ்த்திய எவெர்ற்றன்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை(01) நடைபெற்ற லெய்செஸ்டர் சிற்றியுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் வென்றது.

எவெர்ற்றன் சார்பாக பெட்டோ இரண்டு கோல்களையும், அப்துலாயி டூக்கோரே, இலிமான் என்டியாயே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 56 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் காணப்படுகின்றது. 47 புள்ளிகளுடன் ஆர்சனலும், நொட்டிங்ஹாம் பொரெஸ்டும் காணப்படுகின்றபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், மூன்றாமிடத்தில் பொரெஸ்டும் காணப்படுகின்றன. நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், நியூகாசில் யுனைட்டெட்டும் தலா 41 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் நான்காமிடத்தில் சிற்றியும், ஐந்தாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன. இதில் மற்றைய அணிகளை விட பொரெஸ்டும், நியூகாசிலும் தலா ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.



## ஜேர்மனிய பெண்டெலிஸ்கா தொடர்:

## சமநிலையில் லெய்ப்ஸிக் – பேர்லின் போட்டி

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பெண்டெலிஸ்கா தொடரில், யூனியன் பேர்லினின் மைதானத்தில் சனிக்கிழமை(01) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் ஆர்.பி. லெய்ப்ஸிக் சமப்படுத்தியது.

பெண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் 51 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பயேர்ண் மியூனிச் காணப்படுகின்றது. 42 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான பயெர் லெவர்குசனும், 37 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஐன்ரச்ட் பிராங்க்பேர்ட்டும், 33 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் லெய்ப்ஸிக்கும் காணப்படுகின்றன. இதில் லெவர்குசனும், பிராங்க்ஃபேர்ட்டும் மற்றைய அணிகளை விட தலா ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 03 பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.